# சென்னை உயர்நீதிமன்ற புதிய தலைமை நீதிபதி பதவியேற்பு

**சென்னை, மே 28:** சென்னை உயர்நீதிமன்றத்தின் 33-ஆவது தலைமை நீதிபதியாக சஞ்சய் விஜய்குமார் கங்காபுர்வாலா பதவி ஏற்றுக் கொண்டார்.

சென்னை கிண்டி ஆளுநர் மாளிகையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில்

அவருக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். ஏற்கெனவே உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த முனீஸ்வர்நாத் பண்டாரி 12.9.2022-இல் ஓய்வுபெற்றார்.

இதையடுத்து மூத்த நீதிபதிகள் எம்.துரைசாமி, டி.ராஜா ஆகியோர் பொறுப்பு தலைமை நீதிபதியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றனர். தொடர்ந்து, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக (பொ) எஸ்.வைத்தியநாதன் நியமிக்கப்பட்டார்.

முன்னதாக, உச்சநீதிமன்ற கொலீஜியம் கடந்த ஏப்.19-ஆம் தேதி மும்பை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக (பொ) இருந்த எஸ்.வி.கங்காபுர்வாலாவை, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக நியமிக்க மத்திய அரசுக்கும், குடியரசுத் தலைவருக்கும் பரிந்துரை செய்தது.




சென்னை உயர்நீதிமன்ற புதிய தலைமை நீதிபதி எஸ்.வி. கங்காபுர்வாலாவுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்த ஆளுநர் ஆர்.என்.ரவி. உடன், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எஸ்.வைத்தியநாதன், தலைமைச் செயலர் வெ.இறையன்பு, ஆளுநரின் செயலர் ஆனந்தராவ் விஷ்ணு பாட்டீல், பொதுத் துறை செயலர் டி.ஜெகன்நாதன்.

இதை ஏற்று எஸ்.வி.கங்கா புர்வாலாவை சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக நியமித்து குடியரசு தலைவர் மே 26-ஆம்தேதி உத்தரவிட்டார்.

இதைத்தொடர்ந்து, சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் எஸ்.வி.கங்காபுர்வாலா ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பதவி எற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ், கொல்கத்தா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி டி.எஸ்.சிவஞானம், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.வைத்தியநாதன், அரங்க.மகாதேவன், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர்கள் துரைமுருகன், எஸ்.ரகுபதி, உதயநிதி ஸ்டாலின், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலர் வெ. இறையன்பு, தமிழக அரசின் தலைமை வழக்குரைஞர், அரசு வழக்குரைஞர்கள், மத்திய, மாநில அரசு அதிகாரிகள், மூத்த வழக்குரைஞர்கள், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

புதிய தலைமை நீதிபதிக்கு அமைச்சர்கள் பூங்கொத்து, புத்தகங்கள் வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

**வாழ்க்கை குறிப்பு:** 24.5.1962-இல் மகாராஷ்டிரத்தில் பிறந்த கங்காபுர்வாலா, சட்டப்படிப்பை முடித்து, 1985-இல் வழக்குரைஞர் பணியைத் தொடங்கினார். இவர் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, பாம்பே மெர்க்கன்டைல் கோஆபரேட்டிவ் வங்கி, ஜலகன் ஜனதா ஷாககரி ஆகியவற்றில் வழக்குரைஞராகப் பணியாற்றியுள்ளார்.

2010-ஆம் ஆண்டு மார்ச் மாதம் மும்பை உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதியாக நியமிக்கப்பட்ட கங்காபுர்வாலா, 2022 டிசம்பர் முதல் மும்பை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக (பொ) பொறுப்பு வகித்தார்.

இவர் தேசிய அளவிலான டென்னிஸ் மற்றும் மாநில அளவிலான கூடைப்பந்துப் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

# சீனாவிடம் இருந்து சிக்கலான சவாலை எதிர்கொள்கிறது இந்தியா

**அகமதாபாத், மே 28:** சீனாவிடம் இருந்து மிகவும் சிக்கலான சவாலை இந்தியா எதிர்கொள்வதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இது தொடர்பாக குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரில் உள்ள அனந்த் தேசிய பல்கலைக் கழகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் அவர் பேசியதாவது:

சீனாவிடம் இருந்து மிகவும் சிக்கலான சவாலை இந்தியா எதிர்கொள்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் எல்லைப் பகுதிகளில் இது தெளிவாகத் தெரிகிறது. இரு நாடுகளும் தங்கள் உறவுகளில் ஒரு சமநிலையைக் காண வேண்டியுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே அமைதி பாதிக்கப்பட்டால் அவற்றின் உறவு பாதிக்கப்படாமல் தொடராது. இந்த விவகாரத்தில் தேவையான பதிலடிகள் தரப்பட்டுள்ளன. அந்த பதிலடிகளை

**எஸ்.ஜெய்சங்கர்**

மத்திய அரசு கொடுத்துள்ளது. இந்தியா-சீனா இடையிலான உறவுக்கு அடிப்படையாக பரஸ்பர மரியாதை, நலன்கள் ஆகியவை இருக்க வேண்டும்.

நீங்கள் என்னை மதிக்காமலும், எனது நலன்களைக் கண்டுகொள்ளாமலும் இருந்தால் எவ்வளவு காலத்துக்கு நாம் தோழமை கொண்டிருக்க முடியும்? எல்லைப் பகுதியில் தற்போது இருக்கும் நிலையை மாற்ற தன்னிச்சையாக எந்த முயற்சியும் எடுக்கப்படாமல் இருப்பதை மத்திய அரசு உறுதிப்படுத்தியுள்ளது.



நமது அண்டை நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்துவது அவசியமாகும். வங்கதேசம், நேபாளம், பூடான் போன்ற அண்டை நாடுகள் இந்தியாவுடன் நீண்ட காலமாகவே நெருக்கமாக இருந்து வந்துள்ளன. இந்த நாடுகள் தற்போது சாலைகள், ரயில்வே, நீர்வழி, மின்சாரத் தொகுப்பு ஆகியவற்றுடன் நம் நாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளன.

நமது அண்டை நாடான இலங்கைக்கு கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது நாம் முன்வந்து உதவி செய்தோம். இலங்கைக்கு நாம் செய்த உதவியானது அந்நாட்டுக்கு சர்வதேச செலாவணி நிதியம் (ஐஎம்எஃப்) செய்ததை விட அதிகமாகும்.

அண்டை நாடுகளுடனான உறவை விரிவுபடுத்த மோடி அரசு முயற்சித்து வருகிறது. அண்டை நாடுகள் குறித்து நான் பேசும்போது நமது இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் பெரிய மாற்றம் குறித்து சிந்திக்கிறேன். சீனாவின் எழுச்சி உள்ளிட்ட மற்ற மாற்றங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

குவாட் கூட்டமைப்பு நாடுகள் தற்போது கடல்சார் ஒத்துழைப்பு, உள்கட்டமைப்பு தொடர்புகள், 5ஜி, தடுப்பூசிகள் ஆகியவை குறித்து விவாதித்து வருகின்றன. இஸ்ரேல், அமெரிக்கா, ஐக்கிய அரசு அமீரகம் உள்ளிட்ட நாடுகளுடன் இந்தியா கலந்துரையாடி வருகிறது.

பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் நாளையதினத்தைப்பற்றி மட்டுமே சிந்திக்காமல் அடுத்த பதவிக்காலத்தையும் தாண்டி நாம் சிந்தித்து வருகிறோம்.

இந்தியாவின் எழுச்சியானது உலகில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அதே அளவில் சீனாவும் எழுச்சி பெற்றுள்ளது என்றார்.

# மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு மக்கள்தொகை கணக்கெடுப்பு

## மத்திய அரசு வட்டாரங்கள் தகவல்

**புது தில்லி, மே 28:** அடுத்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் நடைபெற உள்ள மக்களவைத் தேர்தலுக்குப் பிறகே மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகள் நடைபெறுவதற்கான வாய்ப்புள்ளது என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டில் கடந்த 2020-ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் 30 வரை மக்கள்தொகை கணக்கெடுப்பு, தேசிய மக்கள்தொகை பதிவேட்டை புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட இருந்தன. ஆனால் கரோனா நோய்த்தொற்று பரவலால், அந்தப் பணிகளை மத்திய அரசு ஒத்திவைத்தது. அதன் பின்னர் மக்கள்தொகை கணக்கெடுப்பு எப்போது மேற்கொள்ளப்படும் என்பது குறித்து மத்திய அரசு அறிவிக்கவில்லை.

இதுதொடர்பாக மத்திய அரசு அதிகாரிகள் கூறுகையில், 'மாவட்டங்கள், துணை மாவட்டங்கள், வட்டங்கள், காவல் நிலையங்கள் உள்ளிட்ட நிர்வாக பிரிவுகளின் எல்லை வரம்புகள் முடக்கப்பட்டு, 3 மாதங்களான பிறகுதான் மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ள முடியும். அத்துடன் நாடு முழுவதும் மக்கள்தொகையை கணக்கெடுப்பதற்கு 30 லட்சம் அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க 2 முதல் 3 மாதங்கள் தேவைப்படும். இதனிடையே மக்களவைத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் திருத்தம் போன்ற பணிகளை தேர்தல் ஆணையம் தொடங்கும்.

எனவே அடுத்த ஆண்டு மக்களவைத் தேர்தலுக்குப் பிறகே மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகள் நடைபெறுவதற்கான வாய்ப்புள்ளது.

இந்த கணக்கெடுப்பு எப்போது நடைபெற்றாலும், அதுதான் முதல் எண்ம (டிஜிட்டல்) கணக்கெடுப்பாக இருக்கும். இது தங்கள் விவரங்களை குடிமக்கள் சுயமாக சமர்ப்பிக்க வாய்ப்பளிக்கிறது.

அரசு கணக்கெடுப்பாளர் மூலமாக இல்லாமல் சுயமாக மக்கள் தொகை விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய விரும்புவோருக்கு தேசிய மக்கள்தொகை பதிவேடு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதற்காக பிரத்யேக வலைதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அந்த வலைதளம் அறிமுகம் செய்யப்பட்ட பின்னர், தங்களைப் பற்றிய விவரங்களை குடிமக்கள் சுயமாக பூர்த்தி செய்யும்போது ஆதார் அல்லது கைப்பேசி எண்கள் கட்டாயம் சேகரிக்கப்படும்.

**31 கேள்விகள்:** மக்கள்தொகை கணக்கெடுப்பின்போது 31 கேள்விகள் கேட்கப்படும். குடும்பத்தில் எந்த உணவு தானியம் பயன்படுத்தப்படுகிறது, சமையலுக்கு எந்த எரிவாயு பயன்படுத்தப்படுகிறது, எந்த வழியில் குடிநீர் கிடைக்கிறது, கழிவறைப் பயன்படுத்தப்படுகிறதா, கணினி, இணையம், மடிக்கணினி (லேப்டாப்), அறிதிறன்பேசி (ஸ்மார்ட்ஃபோன்), இருசக்கர வாகனம் உள்ளிட்டவை பயன்படுத்தப்படுகிறதா போன்ற கேள்விகள் கேட்கப்படும் என்று தெரிவித்தனர்.

EVA STALIN

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# மொனாகோ கிராண்ட் ப்ரீ: மேக்ஸ் வெர்ஸ்டாபென் வெற்றி

**மொனாகோ, மே 28:** எஃப்1 கார் பந்தயத்தின் நடப்பு சீசனில், மொனாகோ கிராண்ட் ப்ரீ ரேஸில் நெதர்லாந்து வீரரும் ரெட் புல் டிரைவருமான மேக்ஸ் வெர்ஸ்டாபென் ஞாயிற்றுக்கிழமை வெற்றி பெற்றார்.

நடப்பு சீசனில் இத்துடன் 6 பந்தயங்கள் நடைபெற்று நிலையில், 4-ஆவது வெற்றியைப் பதிவு செய்து முன்னிலையில் இருக்கிறார் வெர்ஸ்டாபென். மெக்ஸிகோ வீரரும், ரெட் புல் அணியின் மற்றொரு டிரைவருமான செர்ஜியோ பெரெஸ் 2 வெற்றிகளுடன் அடுத்த இடத்தில் இருக்கிறார். மழை காரணமாக இத்தாலிய பந்தயம் ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.




இந்நிலையில், மொனாகோ பந்தயத்தில் வெர்ஸ்டாபென் முதலிடத்தையும், ஸ்பெயின் வீரரும் ஆஸ்டன் மார்டின் டிரைவருமான ஃபெர்னாண்டோ அலோன்சோ 2-ஆம் இடத்தையும், பிரான்ஸ் வீரரும் அல்ஃபின் டிரைவருமான எஸ்டெபன் ஆகான் 3-ஆவது இடத்தையும் பிடித்தனர். வெர்ஸ்டாபெனுக்கு கடும் சவாலாக முந்தைய பந்தயங்களில் இருந்த செர்ஜியோ பெரெஸ் ஏமாற்றத்துடன் 16-ஆவது இடத்துக்கு வந்தார். அடுத்ததாக ஸ்பானிஷ் கிராண்ட் ப்ரீ பந்தயம், வரும் ஜூன் 4-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

EVA STAL

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# பட்டம் வென்றார் பிரணாய்




கோலாலம்பூர், மே 28: மலேசியா மாஸ்டர்ஸ் பாட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஹெச்.எஸ். பிரணாய், ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஞாயிற்றுக்கிழமை சாம்பியன் பட்டம் வென்றார்.

உலக பாட்மிண்டன் சம்மேளன டூர் போட்டிகளில் பிரணாய் வெல்லும் முதல் கோப்பை இதுவாகும். அதுவே, கடந்த 6 ஆண்டுகளில் பிரணாய்க்கு இது முதல் பட்டம் என்பதும், நடப்பாண்டில் இந்தியாவுக்கு ஒற்றையர் பிரிவில் கிடைக்கும் முதல் பட்டம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இறுதிச்சுற்றில், உலகின் 9-ஆம் நிலை வீரரான பிரணாய் 21-19, 13-21, 21-18 என்ற கேம்களில், உலகின் 34-ஆம் நிலை வீரரான சீனாவின் வெங் ஹாங் யாங்கை 1 மணி நேரம் 34 நிமிஷங்களில் வீழ்த்தினார். 2021 இறுதி வரை காயம் மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக தொடர்ந்து அவதிப்பட்டு வந்த பிரணாய், அதன் பிறகு கடந்த 2 ஆண்டுகளாக அனைத்து போட்டிகளிலும் கடுமையாக முயற்சித்து முன்னேறி வந்தார்.

இந்நிலையில் அதற்கான பலனை அவர் இந்தப் போட்டியின் மூலம் அடைந்திருக்கிறார். அவருக்கு சாம்பியன் கேடயத்துடன் தங்கப் பதக்கமும், ரூ.26 லட்சம் ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டன.

# மக்களுக்கிடையேயான தொடர்பை வலுப்படுத்தும் 'யுவ சங்கமம்'

## 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் பிரதமர் மோடி

புது தில்லி, மே 28: மத்திய கல்வி அமைச்சகத்தின் 'யுவ சங்கமம்' முன்னெடுப்பானது, மக்களுக்கு இடையேயான தொடர்பை வலுப்படுத்த உதவும் என 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

வானொலி வாயிலாக மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமையில் 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரையாற்றி வருகிறார். நடப்பு மாதத்துக்கான 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் அவர் கூறியதாவது:

மத்திய கல்வி அமைச்சகமானது 'யுவ சங்கமம்' என்ற முன்னெடுப்பை எடுத்துள்ளது. இது நாட்டின் பன்முகத்தன்மையை மட்டுமல்லாமல் மக்களுக்கு இடையேயான தொடர்பையும் வலுப்படுத்தும். இந்த முன்னெடுப்பில் கலந்துகொண்ட மாணவர்கள், அது தொடர்பான விளக்கக் கட்டுரைகளை சமூக வலைதளங்களில் வெளியிட வேண்டும். அதன் மூலமாக மற்றவர்கள் இந்த முன்னெடுப்பு குறித்து அறிந்து கொள்வர்.

இந்த முன்னெடுப்பின் மூலமாக, குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் நாட்டின் மற்ற பகுதிகளுக்குச் சென்று அப்பகுதிகளின் கலாசாரம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் உள்ளிட்டவற்றை அறிந்து கொள்ள முடியும்.

இதுவரை 22 மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 1,200 மாணவர்கள் இந்த முன்னெடுப்பின் கீழ் நாட்டின் பலதரப்பட்ட கலாசாரங்களை அறிந்துகொண்டுள்ளனர்.

கடந்த மாதம் 100-ஆவது 'மனதின் குரல்' நிகழ்ச்சி ஒலிபரப்பான போது அதைத் திரளான மக்கள் கேட்டனர். உலகம் முழுவதும் அந்த நிகழ்ச்சி சிறப்பாக ஒலிபரப்பானது. 'மனதின் குரல்' நிகழ்ச்சி குறித்து பலரும் பலதரப்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டு கட்டுரைகளை வெளியிட்டனர்.

**என்டிஆருக்கு மரியாதை:** தெலுங்கு சினிமாவின் சூப்பர்ஸ்டாரான என்.டி.ராம ராவின் பிறந்த நூற்றாண்டு கொண்டாடப்படுகிறது.

அவர் கோடிக்கணக்கான மக்களின் இதயத்தை வென்றுள்ளார். 300-க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ள அவர், வரலாற்று கதாபாத்திரங்களைத் தன் நடிப்பின் மூலமாக மக்களின் கண் முன்னே கொண்டுவந்தவர்.

கிருஷ்ண பகவான், ராமர் உள்ளிட்ட பல்வேறு கடவுள்களை நம்



கண்முன்னே அவர் கொண்டுவந்தார். நடிப்புத் துறையிலும் அரசியலிலும் தனக்கெனத் தனி முத்திரை பதித்தவர் என்.டி.ஆர்.

**அருங்காட்சியகங்களின் சிறப்பு:** வரலாற்றின் நினைவுகளை நாம் போற்றும்போது எதிர்காலத் தலைமுறையினருக்கும் அவை வழிகாட்டுகின்றன. அருங்காட்சியகங்கள் மூலமாகப் புதிய பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும். ஜப்பானில் ஹிரோஷிமா அமைதி அருங்காட்சியகத்தை அண்மையில் பார்வையிட்டேன். அது உணர்ச்சிபூர்வமான அனுபவங்களை ஏற்படுத்தியது.

சில தினங்களுக்கு முன் சர்வதேச அருங்காட்சியக கண்காட்சி இந்தியாவில் நடைபெற்றது. அதில், உலகில் உள்ள 1,200-க்கும் அதிகமான அருங்காட்சியகங்களின் மாதிரிகள் இடம்பெற்றன. இந்தியாவில் பலவிதமான அருங்காட்சியகங்கள் உள்ளன. அவை வரலாற்றைத் திறம்பட எடுத்துரைக்கின்றன.

நாடு 75-ஆவது சுதந்திர நூற்றாண்டைக் கொண்டாடுவதையொட்டி மாவட்டந்தோறும் 75 ஏரிகளை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதுவரை நாடு முழுவதும் சுமார் 50,000 ஏரிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது நீர்ப் பாதுகாப்பில் மிக முக்கியமான நடவடிக்கை.

**அடிமைத்தனத்தை ஏற்காத மனநிலை:** சுதந்திரப் போராட்ட வீரரான வீர சாவர்க்கரின் பிறந்த தினம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது. அவரது தியாகம், மனதிடம், உறுதிப்பாடு ஆகியவை இன்றும் மக்களை ஊக்கப்படுத்தி வருகிறது.

அந்தமான் சிறையில் வீர சாவர்க்கர் அடைத்து வைக்கப்பட்டிருந்த அறையைப் பார்வையிட்டேன். அந்த நாளை என்னால் எப்போதும் மறக்க முடியாது.

வீர சாவர்க்கரின் குணநலனானது வலிமையையும் பெருந்தன்மையையும் வெளிப்படுத்துகிறது. அவரது அச்சமற்ற, சுயமரியாதை மிகுந்த மனநிலையானது அடிமைத்தனத்தை ஒருபோதும் ஏற்காது. சுதந்திரப் போராட்டத்துக்காக மட்டுமல்லாமல் சமூக சமநிலைக்காகவும் சமூக நீதிக்காகவும் அவர் ஆற்றிய பங்களிப்பு இன்றும் நினைவுகூரத்தக்கது என்றார் பிரதமர் மோடி.

முன்னதாக, பழைய நாடாளுமன்றக் கட்டடத்தின் மைய அரங்கில் உள்ள வீர சாவர்க்கரின் படத்துக்கு பிரதமர் மோடி, மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற எம்.பி.க்கள் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

# இன்று விண்ணில் பாய்கிறது 'ஜிஎஸ்எல்வி எஃப்-12' ராக்கெட்!

**சென்னை, மே 28:** போக்குவரத்து வழிகாட்டுதலுக்கான என்விஎஸ்-01 செயற்கைக்கோளுடன் 'ஜிஎஸ்எல்வி எஃப்-12' ராக்கெட் திங்கள்கிழமை விண்ணில் பாய்கிறது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் ஏவுதளத்திலிருந்து காலை 10.42 மணிக்கு அந்த ராக்கெட் செலுத்தப்பட உள்ளது. இதற்கான 27.30 மணி நேர கவுன்ட்டவுன் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

தரைவழி, கடல்வழி, வான்வழி போக்குவரத்து மற்றும் பாதுகாப்புப் பயன்பாட்டுக்காக 'இந்திய மண்டல வழிகாட்டுதல் செயற்கைக்கோள் அமைப்பு' என்ற கட்டமைப்பை (ஐஆர்என்எஸ்எஸ்) உருவாக்க இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) முடிவு செய்தது.



என்விஎஸ்-01 செயற்கைக்கோளுடன் விண்ணில் செலுத்த தயாராக உள்ள ஜிஎஸ்எல்வி எஃப்-12' ராக்கெட்.

அதன்படி, ரூ.1,420 கோடி செலவில் ஐஆர்என்எஸ்எஸ் 1ஏ, 1பி, 1சி, 1டி, 1இ, 1எஃப், 1ஜி என 7 வழிகாட்டுதல் செயற்கைக்கோள்கள் வடிவமைக்கப்பட்டு 2013 முதல் 2016-ஆம் ஆண்டு வரை வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டன. அவற்றில் செயலிழந்த செயற்கைக்கோள்களுக்கு மாற்றாக புதிய செயற்கைக்கோள்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், 'ஐஆர்என்எஸ்எஸ் 1-ஜி' செயற்கைக்கோளுக்கு மாற்றாக 'என்விஎஸ்-01' செயற்கைக்கோளை இஸ்ரோ வடிவமைத்தது. இந்த செயற்கைக்கோள் 'ஜிஎஸ்எல்வி எஃப்-12' ராக்கெட் மூலம் திங்கள்கிழமை விண்ணில் ஏவப்பட உள்ளது.

இதற்கான இறுதிகட்டப் பணிகள் நிறைவடைந்து கவுன்ட்டவுன் தொடங்கியிருக்கிறது.

'என்விஎஸ்-01' செயற்கைக்கோள் 2,232 கிலோ எடை கொண்டது. இதன் ஆயுட்காலம் 12 ஆண்டுகள்.

இதில் முதல்முறையாக உள்நாட்டு தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்ட அணுக் கடிகாரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது மற்ற செயற்கைக்கோள்களுடன் சேர்ந்து தரை, கடல், வான்வெளி போக்குவரத்தைக் கண்காணிக்கும். பேரிடர் காலங்களில் துல்லிய தகவல்களைத் தெரிவிக்கும் என்று இஸ்ரோ தகவல் தெரிவித்துள்ளது.